பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 29 திங்கட்கிழமை 13.07.2020 கதிர் 246

இது ரகசியம் அல்ல!

நேற்றிரவு நல்லூரை அண்டிய விடுதியில் ஓர் இராப் போசனம்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பெரிய புள்ளிகள் அனைத்தும் திரண்டிருந்தனர்.

முதலில் வீணை இசை நிகழ்வு.

*"நல்ல மென்மையான வீணை இசை கேட்டு*

பக்கம்02 »

இறுதி நிமிடம் வரை காத்திருக்கவேண்டாம்

## தேர்தலை உடன் ஒத்திவையுங்கள்!

ஆணைக்குழுவிடம் ரணில் அவசர வேண்டுகோள்



கொழும்பு, ஜூலை 13

ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை உடன் பிற்போடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பக்கம் 02 »

கீரிமலையில் நேற்றுச் சம்பவம்

[redacted]

பக்கம் 02 »

கொரோனா பரவல் தீவிரம்;

# மீண்டும் ஒரு வாரம் பாடசாலைகள் பூட்டு!

கொழும்பு, ஜூலை 13


நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளுக்கும் இன்று முதல் ஒரு வாரத்துக்கு விடுமுறை வழங்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் நிலை குறித்து கல்வி அமைச்சு மிகுந்த கவனம் செலுத்தி வருவதற்கமைய, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சு விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமை மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட சில தவறான செய்திகளின் அடிப்படையில் பெற்றோர்கள், குழந்தைகள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் சந்தேகங்களுக்கும் அச்சத்துக்கும் உள்ளாகியிருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பக்கம் 02 »

## ஆவா குழுவுக்கு எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 13

வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடும் ஆவா குழு மற்றும் பக்கம் 02 »

## உடுத்துறையில் சிக்கிய கஞ்சா



நேற்று முன்தினம் யாழ்.வெற்றிலைக்கேணி, உடுத்துறை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது பக்கம் 02 »

## 2612 பேருக்கு கொரோனா

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 10பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பக்கம் 02 »




## கொரோனா வைரஸ் பரவல் தேசியப் பேரழிவாக மாறலாம்

சபாநாயகர் கரு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை

கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் அதிகரித்துள்ளது என விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இது தேசிய பேரழிவாக மாறாலாம்.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் சபாநாயகர் கரு ஜயசூரிய.

ஒருவர் தனது பாதுகாப்பை உறுதி செய்வது மிகவும் முக்கியம் என்பதை மக்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன் என்று குறிப்பிட்டுள்ள சபாநாயகர், அனைவரையும் மிகவும் தீவிரமாக பக்கம் 02 »

## உரும்பிராயில் நேற்று விபத்து; இளம் குடும்பப் பெண் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 13

உரும்பிராய்ச் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி இளம் குடும்பப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் குரும்பசிட்டி வசாவிளான் பகுதியைச் சேர்ந்த அனோஜன் கஜேந்தினி (வயது 17) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இவர் உரும்பிராய் சந்திக்கு அண்மையில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பக்கம் 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*மகிழ்ந்தீர்கள். அதே வீண இசை மீட்டும் அரசியல் பிரமுகர் – உங்கள் நண்பர் – இப்போது பேசுவார்"* – என்ற அறிவிப்புடன் வந்தார் மைக்குக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

முன்வரிசையில் பல பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசார் ஊழியர்கள் என்று ஒரு கல்விப் புலமே அங்கு திரண்டிருந்தது.

கைத்தொலைபேசியில் அனுப்பப்பட்ட மெஸேஜ்களின் அடிப்படையில் திரண்ட புலமைசார் கூட்டம் – இரவு விருந்துடன் சந்திப்பு.

இப்படிக் கல்விசார் அதிகாரிகளைக் கூட்டமாகக் கூட்டி விருந்துண்ணுவது தப்பானது என்ற அடிப்படையில் யாரோ தேர்தல் ஆணையத்துக்குப் போட்டுக் கொடுத்து விட்டார்கள் போலும். தேர்தல் அதிகாரிகள் அங்கு சென்றனர். அந்த ஹோட்டலில் சாப்பாடு ஓடர் பண்ணி, எடுத்துக் கொண்டு போகின்றவர்கள் போல பாசாங்கு பண்ணி, நீண்ட நேரம் அங்கு நின்றனர். கூட்டம் பற்றிய விவரங்களைச் சேகரித்தனர். படங்களும் தாராளமாக எடுத்துக் கொண்டனர். அவற்றில் சில பிரதிகளை நாமும் பெறமுடிந்தது.

பல்கலைக்கழக உயர்மட்டத்தினர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், போதனைசார் அலுவலர்கள் என்று புத்திஜீவிகளை அமைச்சர் ஒன்றாக அழைத்து இரவு விருந்து கொடுத்து அரசியல் பேசி பிரசாரம் செய்வது சட்டத்தில் தவறானதா, தேர்தல் விதிகளை மீறியதா? தெரியவில்லை.

ஒரு காலத்தில் பேரவைக்கான முன் ஆயத்தக்கூட்டங்களைத் தமக்கு முன்பாக ஸ்ரீதர் தியேட்டரில் நடத்திக் காட்டியவர் டக்ளஸ் தேவானந்தா. அது மறக்கக் கூடியதல்ல.

இதற்கிடையில் மன்னாரிலும் டக்ளஸ் தேவானந்தா பங்கு பற்றிய ஒரு பரப்புரைக் கூட்டம் குறித்து சர்ச்சை கிளப்பப்பட்டிருக்கின்றது.

கடந்த 10ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் மன்னார் சென்றிருந்தார்.

அங்கு முள்ளிக்குளத்தில் உள்ள ஒரு பங்குத் தந்தை தமது லியோன் தேவாலய வளாகத்துக்குள் அமைச்சர் டக்ளஸை அழைத்து ஒரு கூட்டம் வைத்துள்ளார்.

அது தேர்தல் பரப்புரைக் கூட்டம் என்று தெரிவித்து அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மத வழிபாட்டுத் தலங்களிலும் அவற்றின் வளாகத்திலும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் நடத்துவது தேர்தல் சட்டத்தின் பிரகாரம் சட்ட விதிமுறை மீறலாகும். அதைக் குறிப்பிட்டு உள்ளூர்வாசி ஒருவர் புகைப்படங்கள் மற்றும் ஒலிப்பதிவுகளின் உதவியுடன் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டு சென்றிருக்கின்றார்.

இந்த விடயங்கள் குறித்து தேர்தல் ஆணையம் என்ன செய்யப் போகின்றது? தெரியவில்லை. பார்ப்போம்.

–மின்னல்–

## ஆவா குழுவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் அரியாலைப் பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பரவலாக ஒட்டப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்கள் ஊடாகவே மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

என்.ஜி.ரி. என்று உரிமை கோரப்பட்ட அமைப்பினாலேயே மேற்படி எச்சரிக்கை துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

## வெடிபொருளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரும் இராணுவத்தினரும் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போது நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்கள் நால்வரும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் இளவாலைப் பொலிஸார் கூறினர்.

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் மீண்டும் பரவத் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து நாடு ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளதால் தேர்தலைப் பிற்போட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தலைப் பிற்போடுவதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு இறுதி நிமிடம் வரை காத்திருக்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுத்தேர்தலுக்காக அனைத்து வேட்பாளர்களும் ஏற்கனவே பெருமளவு பணத்தைச் செலவிட்டுள்ளனர். இறுதி நேரத்தில் தேர்தலைப் பிற்போட்டால் அவர்கள் செலவிட்ட பணம் வீணாகி விடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டாவது சுற்று கொரோனா வைரஸ் நிச்சயமாக பொருளாதாரத்தை அழித்துவிடும் என்பதால் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உடுத்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

78 லட்சம் ரூபா பெறுமதியான 52 கிலோ 680 கிராம் கேரள கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடல் வழியாக இலங்கைக்குப் போதைப்பொருள் கடத்தப்படுவதனை கட்டுப்படுத்தும் வகையில், கடற்படையினர் வழமையான சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான தொரு சோதனை நடவடிக்கை வெற்றிலைக்கேணி, உடுத்துறை பகுதியில் வடக்கு கட்டளை பிரிவுடன் இணைக்கப்பட்ட கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட டிங்கி படகொன்றையும் சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளதையும் கடற்படையினர் அவதானித்துள்ளனர்

அந்த டிங்கிப் படகை கடற்படையினர் சோதனையிட்டபோது, 02 சாக்குகளில் அடைக்கப்பட்ட போதைப்பொருள் பொதிகள் 13 ஐ க்கண்டுபிடித்துள்ளனர் என, கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள கேரள கஞ்சாவையும் டிங்கி படகையும் மேலதிக விசாரணைகளுக்காக யாழ். விசேட அதிரடிப் படையினரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

அத்தோடு, தப்பிச் சென்றுள்ள சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை யாழ். பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 03 தொன் நிறையுடைய கேரள கஞ்சாவை கைப்பற்றியுள்ளதாக, கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## உரும்பிராயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது சைக்கிள் பட்டாவுடன் எதிர்பாராதவிதமாக மோதி விபத்துக்குள்ளானது.

இதில் சம்பவ இடத்திலேயே இளம் குடும்பப் பெண் உயிரிழந்ததுடன் அவரது கணவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பந்தமான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

## 2612 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2612ஆக அதிகரித்துள்ளது.

# தாய் செலுத்திய ஓட்டோ வாய்க்காலில் பாய்ந்ததில் அவரும் 2 பிள்ளைகளும் பலி

வேயங்கொட – குடல்ஒலுவ பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோ வாய்கால் ஒன்றில் கவிழ்ந்து விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் ஒன்றரை வயது மற்றும் 9 வயது பிள்ளைகள் இருவரும் அவர்களுடைய தாயும் உயிரிழந்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் தாயே ஓட்டோவை ஓட்டிச் சென்றுள்ளார் எனவும் அவருக்கு நித்திரை ஏற்பட்டதான காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் சடலம் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையர் நாடு திரும்பும் நடவடிக்கை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

தனிமைப்படுத்தல் நிலையங்களில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால், வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர்கள் சுதந்திரம் மற்றும் தெளிவான மனதுடன் செயற்பட வேண்டும் என்பதால், குழந்தைகளின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக் கல்வியை செயல்படுத்துவதற்கு உகந்த சூழலை உருவாக்குவது அமைச்சின் பொறுப்பாகும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கமைய, சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளின் வழிகாட்டல்களைக் கருத்தில்கொண்டு, பாடசாலைத் துறையில் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளைக் கண்காணிக்க, நாட்டின் அனைத்து பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு ஒரு வார கால விடுமுறை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இம்முடிவை அனைத்து தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் பிரத்தியேக வகுப்புகளும் பின்பற்றும் என்று கல்வி அமைச்சு எதிர்பார்க்கின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், தபால் வாக்குச் சாவடிகளாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகளை உரிய நாள்களில் திறந்து, தபால் வாக்களிக்கும் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கான விடயங்களை மேற்கொள்வது அதிபர்களின் பொறுப்பாகும் என்றும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, கடந்த மார்ச் 13ஆம் திகதி மூடப்பட்ட பாடசாலைகள், நான்கு கட்டமாக திறக்க எடுத்த முடிவுக்கமைய, கடந்த ஜூன் 29 ஆம் திகதி மாணவர்கள் தவிர்ந்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் பாடசாலைக்கு சமுகமளித்தனர்.

இரண்டாம் கட்டமாக, கடந்த வாரம், ஜூலை 06ஆம் திகதி, 2ஆம் கட்டமாக, தரம் 05, 13, 11ஐச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கை ஆரம்பமானது.

மூன்றாம் கட்டமாக, எதிர்வரும் ஜூலை 20ஆம் திகதி தரம் 10, 12 மாணவர்களின் கல்வி நடவடிக்கை ஆரம்பமாக இருந்தது.

4ஆம் கட்டமாக, ஜூலை 27ஆம் திகதி, தரம் 3, 4, 6, 7, 8, 9 மாணவர்களின் கல்வி நடவடிக்கை ஆரம்பமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி தரம் 01, 02 மற்றும் முன்பள்ளி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் கல்வி அமைச்சால் முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஏனைய அனைத்துக் கல்விப் பணியாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாக, கல்வி அமைச்சில், மாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் சுகாதார மேம்பாட்டு அலுவலர்களைத் தொடர்புகொள்ள தகவல் மத்திய நிலையமொன்று கல்வி அமைச்சால் நிறுவப்பட்டுள்ளது.

இந்த நிலையம் பிரதிப் பணிப்பாளர் ஒருவரின் கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கத்தின் கீழ் செயற்படுகின்றது.

துரித அழைப்பு இலக்கம் 1988. தொலைநகல் இலக்கம் 0112785818, மின்னஞ்சல் infomoe.gov.lk

இந்த இலக்கத்தைத் தொடர்புகொண்டு, அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட கல்வி அலுவலர்கள் தமது சேவை நிலையத்தினதும் பிரதேசத்தினதும் கொரோனா வைரஸ் தொடர்பாகத் தகவல்களை அனுப்ப முடியும்.

இந்தத் தகவல் மத்திய நிலையத்தின் ஊடாக நாட்டின் அனைத்து மாகாண, வலயக் கோட்டத்துக்குள் வைரஸ் தொற்று பரவல் நிலைமை குறித்து பாடசாலைகளுக்குரிய தகவல்களைத் திரட்டிக்கொள்வதோடு அந்தத் தகவல் தொடர்பாக சுகாதார அலுவலர்களுக்கு அறிவித்து சுகாதாரப் பாதுகாப்பைக் கடைப்பிடிப்பதற்காக அவசிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனா வைரஸ் நோய் பரவுவதைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் நிலைமையைத் தேர்தலின்போது உறுதி செய்வதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளார். எனினும், இந்த வழிகாட்டுதல்கள் வர்த்தமானி அறிவித்தல்களாக வெளியிடப்படாதது கவலையளிக்கின்றது.

வர்த்தமானி அறிவித்தல்கள் இல்லாததன் காரணமாக சட்ட அமுலாக்கல் அதிகாரிகளால் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது.

பிரதமரும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். தேர்தல் பிரசாரங்கள் போன்ற கடும் போட்டித்தன்மை நிறைந்த சூழ்நிலைகளின்போது சட்ட ரீதியில் கட்டுப்படுத்தாத விடயங்களால் முழுமையான பலன் ஏற்படாது.

கடந்த சில வாரங்களில் பல அரசியல்வாதிகள், இந்தச் சுகாதார வழிகாட்டுதல்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பு இல்லாததைப் பயன்படுத்தி அந்த விதிமுறைகளை மீறும் அரசியல் பிரசாரக் கூட்டங்களை ஒழுங்கு செய்தமையைக் காணமுடிந்தது – என்றார்.

# தேவாரங்களே சான்று!



## மேதானந்த தேரர் மீண்டும் சர்ச்சைக்குரிய கருத்து

கொழும்பு, ஜூலை 11

திருக்கோணஸ்வரம், நல்லூர் உட்பட எந்தவொரு வரலாற்றையும் தான் திரிபுபடுத்தவில்லை என்பதற்குத் தமிழ்த் தேவார பதிகங்களே சான்று என கிழக்கு தொல்பொருள் செயலணியின் உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை இராவணன் ஆண்டான் எனக் கூறுவது கட்டுக்கதை, வடக்கு கிழக்கு தமிழர்களின் பூர்வீகம் அல்ல என்று குறிப்பிட்டு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த எல்லாவெல மேதானந்த தேரர், அதன் பின்னர், திருக்கோணேஸ்வரம் ஆலயம் கோகர்ண்ண விகாரையாகும், யாழ். நல்லூர் முருகன் ஆலயம் சபுமல்குமார என்ற சிங்கள இளவரசனால் கட்டப்பட்டது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு தமிழர்கள் மற்றும் இந்து அமைப்புக்களிடத்திலிருந்து கண்டனங்கள் வெளியிடப்பட்டன. இந்நிலையில் இது குறித்து கருத்து வெளியிடும்போதே, எல்லாவெல மேதானந்த தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

திருக்கோணேஸ்வரம், நல்லூர் உள்ளிட்டவை தொடர்பாக நான் கூறிய கருத்துக்களை மீளப்பெறமுடியாது.

நான் வரலாற்றைத் திரிபுபடுத்தவில்லை. தமிழ் தேவாரப் பதிகங்களில் அதற்கான சான்றுகள் உள்ளன. தற்போது அவற்றை அழித்திருப்பார்களோ தெரியாது. ஆனால் என்னால் தெரிவிக்கப்பட்ட வையே வரலாற்று உண்மையாகும்.

அதற்காக நாம் கோணேச்சர, நல்லூர் ஆலயங்களை இடித்துவிட்டு மீண்டும் விகாரைகளைக் கட்டுவதென்று பொருள் பாடாது. இவ்வாறான வரலாற்றுத் தலங்களை நாம் பாதுகாக்க வேண்டும்.

கிழக்கு மாகாண செயலணி தற்போது மட்டக்களப்பில் தனது பணிகளை ஆரம்பித்துள்ளது. செயலணியின் உறுப்பினர்கள் தொல்பொருள் இடங்களைப் பார்வையிடும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேநேரம் ஜனாதிபதி செயலணி தொடர்பாக யாரும் அச்சமடைய வேண்டியதில்லை. அந்தச் செயலணி தொல்பொருள் இடங்களை அடையாளம் கண்டு பாதுகாக்கும் செயற்பாட்டையே முன்னெடுக்கவுள்ளது.

இதில் யாருக்கும் எந்தப்பிரச்சினையும் கிடையாது. தொல்பொருள் செயலணிக்கு பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் என்ற பேதங்கள் இல்லை. தொல்பொருள்களாக எவையெல்லாம் அடையாளப்படுத்தப்படுகின்றனவோ அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கும் வரலாற்று பணியையே செயலணி மேற்கொள்ளவுள்ளது – என்றார்.

# விக்கியை வன்னி புறக்கணிக்கும்!

## கூறுகின்றார் சிவமோகன்

வவுனியா, ஜூலை12

வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையத்தின் விவகாரத்துக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க தவறிய சி.வீ.விக்னேஸ்வரனின் கட்சியை வன்னி நிலம் ஒட்டுமொத்தமாக புறக்கணிக்குமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.



வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் தொல்பொருள் திணைக்களம் ஒட்டுமொத்தமாக இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.

மேலும் எமது பகுதிகள் அனைத்தும் பௌத்தர்களின் பிரதேசம் என பிரகடனப்படுத்தும் அளவிற்கு அவர்கள் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கூட தமிழ் மக்களுக்கு செய்தது துரோகமே. எம்மை உடைப்பதற்கு ஆரம்ப புள்ளியாக அவரை பாவிக்க முற்பட்டுள்ளனர். ஆனால் வன்னி நிலப்பரப்பில் அவருக்கான எந்த இடமும் இல்லை.

மேலும் வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் எவ்வளவு தூரம் இழுத்தடிக்கப்பட்டது. இறுதியில் அவரது கையில் விடப்பட்டப்போது சரியான தீர்வை முன்வைக்கவில்லை. எனவே விக்கியின் கட்சியை இந்த வன்னி நிலம் ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கும் என்பதனை நான் ஆணித்தரமாகச் சொல்லுவேன் – என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அசாத்திய மௌனம் இது!

**பொதுத் தேர்தல் பிரசார கூட்டுக்கு மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் முக்கியஸ்தருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அறிவித்த ஒரு கருத்து மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.**

**அந்த அறிவிப்பு வெளியாகி இரண்டு நாள்கள் கடந்து விட்டன.**

**எதிரணியில் - குறிப்பாகத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணித் தரப்பில் - முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா போன்றோர் எல்லோரிடமிருந்தும் - காட்டமான பிரதிபலிப்புகள் வந்து விட்டன.**

***“பொதுத் தேர்தலின் பின்னர் அமையும் ராஜபக்ஷக்களின் அரசில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதாயினும் பேரம் பேச வேண்டியிருக்கும். அதற்கான பலம் எமக்கிருக்க வேண்டும்”* என்று சுமந்திரன் சொன்ன கருத்து உண்மையில் தமிழரசினதும், தமிழ்க் கூட்டமைப்பினதும் நிலைப்பாட்டில் ஒரு பாரிய மாற்றம்தான்.** paradigm shift **என்று சொல்லக் கூடிய வேறுபாட்டு நிலைதான்.**

**எமது இனப் பிரச்சினைக்கு நீதியான ஒரு தீர்வு கிட்டும் வரை அரசில் அமைச்சர் பதவி ஏற்கமாட்டோம் என்பதுதான் இதுவரை காலமும் தமிழரசு உட்பட்ட கூட்டமைப்பின் ஒரே நிலைப்பாடாக இருந்து வந்தது.**

**சம்பந்தன், மாவை, சுமந்திரனில் தொடங்கி சகல கூட்டமைபப்புத் தலைவர்களும் அந்த நிலைப்பாட்டைத்தான் கடந்த வாரம் வரைத் திரும்பத் திரும்பக் கூறி வந்தார்கள்.**

**அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறும் ஒரு முடிவுக்கான முன்னறிவித்தலே சுமந்திரனின் பேச்சு.**

**அமைச்சுப் பதவியை ஏற்போம் என்று சுமந்திரன் அறிவிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனாலும் தீர்வு கிட்டும் வரை அமைச்சுப் பதவியை ஏற்கக மாட்டோம் என்று உறுதியாகக் கூறி வந்தவர்கள், அமைச்சுப் பதவியைப் பெறுவதானாலும் அதற்கும் பேரம் பேசுவதற்கு நாடாளுமன்றப் பலம் எமக்கு அவசியம் என்று கூறுவது பெரும் நிலை மாற்றம் தான். அதுவும் தலைகீழான கருத்து நிலை மாற்றம்.**

**ஆனால், இந்தக் கருத்து நிலை மாற்றம் ஒரு தலைப்பட்சமாக - தம் பாட்டில் - சுமந்திரன் அறிவித்த விடயமாகும்.**

**இது தமிழரசுக் கட்சிக்குள்ளேயோ அல்லது தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலோ ஆராய்ந்து எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல.**

**குறைந்தபட்சம் சம்பந்தன், சுமந்திரன், மாவை போன்ற மூத்த தலைவர்கள் தங்களுக்குள் பேசி எடுத்த முடிவு தன்னும் இல்லை. ஊடகவியலாளர்களுக்குத் தெரிந்த தகவல்களின்படி சுமந்திரன் தம்பாட்டில் அறிவித்த முடிவு.**

**அப்படி சுமந்திரன் தம்பாட்டில் எடுத்த முடிவு குறித்து - பெரிய கொள்கை நிலைப்பாட்டு மாற்றம் சம்பந்தமாக - தமிழரசுக்குள்ளும், கூட்டமைப்புக்குள்ளும் அதீத மௌனம் பேணப்படுகின்றது.**

**அதுவும் சுமந்திரனுக்குக் கால் தடம் போடுவதற்கு என்றே இந்தத் தேர்தல் சமயத்தில் கண் கொத்திப் பாம்புகளாகப் பல தரப்புகளும் காத்திருக்கையில், அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து இது விடயத்தில் மௌனம் - நிசப்தம் - பேணுகின்றன.**

**அஹிம்சை வழிப் பயணம்தான் தமிழரசின் அடிப்படைக் கோட்பாடு. அதுவே அதன் ஸ்தாபகர் தந்தை செல்வாவினதும் ஏனையோரினதும் பாதை.**

**தென்னிலங்கைச் சிங்களச் செய்தியாளர் ஒருவரின் ஆக்ரோஷமான கேள்விக்குப் பதிலளித்த சுமந்திரன், தமிழரசின் கொள்கைப்படி ‘நான் ஆயுதப் போராட்டத்தை ஏற்கவில்லை’ என்று கூறியமைக்காக அவரது கட்சியினராலேயே பிய்த்து உதறப்பட்டார். துரோகி என்ற சாரப்பட வர்ணிக்கப்பட்டார். தமிழரசிலும், கூட்டமைப்பிலும் ஒட்டுண்ணி என்று விமர்சிக்கப்பட்டார்.**

**அப்படி எல்லாம் அதற்குப் பிய்த்து உதறியவர்கள், இன்று அமைச்சுப் பதவி ஏற்பது பற்றிய சுமந்திரனின் நிலைப்பாடு தொடர்பில் சத்தம் சந்தடியின்றி இருப்பது ஏன்?**

**அதுவும் தமிழரசும், கூட்டமைப்பும் கூடி, ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய ஒரு கொள்கை நிலைப்பாடு சம்பந்தப்பட்ட விடயத்தில் தனித்து முடிவெடுத்துத் தம்பாட்டில் அறிவித்த சுமந்திரன் குறித்து இந்தத் தரப்புகள் எல்லாம் மௌனம் காப்பது விசித்திரத்திலும் விசித்திரமானது.**

**தேர்தலுக்கு இன்னும் மூன்று வாரங்கள்தான் உள்ளன. அதற்கு பின்னார் வரப் போகின்ற அரசியல் சூழமைவு எத்தகையது என்பது இப்போது யாரும் எதிர்வு கூற முடியாத நிலைமையாகும்.**

**அத்தகைய நிலையில் -**

**தப்பித் தவறி இப்போது சுமந்திரன் குறிப்பிட்டமை போல அமைச்சுப் பதவிகளை ஏற்க நேர்ந்தாலும் நேரலாம். இப்போது பகிரங்கமாக சுமந்திரனின் முடிவை எதிர்த்தால் - வழமை போல சுமந்திரனுக்கு எதிராகப் பகிரங்க அறிவிப்பு விடுத்துக் களேபரம் பண்ணினால் - தேர்தலுக்குப் பின்னர் வரக் கூடிய சூழலில் அமைச்சுப் பதவிக்குத் தாங்களும் உரிமை கோரும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதற்காக இப்போது வாய் பொத்தி நல்ல பிள்ளைகள் போல மௌனம் காக்குகின்றனரோ இவர்கள்?**

# பழைய முறையிலாவது மாகாண சபைத் தேர்தல்

## உடன் நடத்துவோம் என்கிறார் பிரதமர்



பொதுத் தேர்தலின் பின்னர் அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் பழைய முறையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவர்,பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை பாதுக்க பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் அரசாங்கம் ஆட்சியில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்களுக்கு ஜனநாயக உரிமையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ -

இந்த நிலத்திற்குள் நுழையும் போதே என்னால் மிகவும் மகிழ்ச்சியை உணர முடிகின்றது. எங்கள் அரசாங்கம் காணப்பட்ட காலப்பகுதியில் நான் பாடசாலை ஒன்றை திறக்க வந்தவுடன் இந்த நிலத்தை பார்க்க வந்தேன். இங்கு மிகப்பெரிய சதுப்பு நிலமே காணப்பட்டது.

நான் அந்த நேரத்திலேயே அப்போதைய பாதுகாப்பு செயலாளராக செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு அழைப்பேற்படுத்தி இந்த நிலத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூறினேன். அவர் அந்த வேலையைச் செய்தார்.

இதனால் இன்று நங்கள் இந்த முறையில் மிகவும் சுத்தமாக, தெளிவான அபிவிருத்தியடைந்த இடத்தில் கூட்டத்தை நடத்துவது குறித்து எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை உணர முடிந்தது.

அன்று நாங்கள் சிறிய கலந்துரையாடலில் ஆரம்பித்த பொதுஜன பெரமுனவின் வருகை இன்று மிகப்பெரிய சக்தியாகியுள்ளது. பிரதேச சபை தேர்தலில் நான்காயிரம் பிரதிநிதிகளை நியமிக்க முடிந்தது. அன்று 71 சதவீத வாக்குகளை பெற்று தேர்தலில் வெற்றி பெற்றோம். வடக்கு - கிழக்கை தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் நாங்கள் மிகவும் தெளிவான விசேட வெற்றியை பெற்றோம் என்று கூறினால் சரியாக இருக்கும்.

கடந்த அரசாங்கம் இரண்டு வருடங்களாக மாகாண சபை தேர்தலை பிற்போட்டது. மாகாண சபை தேர்தலை பிற்போட்டுவிட்டு முடிந்த விடயங்களை செய்தார்கள். நாட்டில் நல்ல நேரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்த நேரிட்டது.

நாங்கள் ஜனாதிபதி தேர்தலில் பாரிய வெற்றியை பெற்றோம். இந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று அரசமைப்பில் மாற்றம் மேற்கொண்டு பழைய முறையிலாவது மாகாண சபை தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயக உரிமையைக் காப்பாற்ற நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

கடந்த 5 வருட ஆட்சியில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் முடிந்த விடயங்களை செய்தோம். எனினும் கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் இருந்த மோதல் காரணமாக மக்களுக்கு எந்த ஒரு விடயமும் கிடைக்கவில்லை. தற்போது என்றாலும் ஐக்கிய தேசிய கட்சியில் பிளவுப்பட்டவர்கள் அரசாங்கம் ஒன்றை அமைக்க வாக்கு கேட்கவில்லை.

வரலாற்றில் முதல் முறையாக எதிர்க்கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வாக்கு கேட்காத முதல் சந்தர்ப்பம் இதுவாகும். அவர்கள் சிறிகொத்தவை கைப்பற்றவே வாக்கு கேட்கின்றார்கள். அது நீதிமன்றத்திற்கு சென்றாவது தீர்த்துக் கொள்ள முடியும். நாட்டை அமைக்க எங்களுடன் இணையுமாறு நான் எங்கள் இளைஞர், யுவதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

தொழில், தொழிற்சாலை, அபிவிருத்தி என்ற துறை நாட்டிற்கு அவசியமாகும். எங்கள் நாடு எங்கள் காலத்தில் மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டது. துறைமுகம், விமான நிலையம் மாத்திரமல்ல. பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் மஹிந்தோதய விஞ்ஞான பீடத்தின் ஊடாக நாங்கள் பாரிய கல்வி வளர்ச்சி ஒன்றை மேற்கொண்டோம்.

பாடசாலைகளை கட்டியெழுப்ப நாங்கள் பாரிய வேலைத்திட்டங்களை செய்துள்ளோம். வடக்கு - கிழக்கு உட்பட முழு இலங்கைக்கும் நூற்றுக்கு நூறு வீதம் மின்சாரம் வழங்கினோம். தற்போது முழு நாட்டிற்கும் சுத்தமான குடிதண்ணீர் வழங்குவதே எங்கள் நோக்கமாகும். மின்சாரம் வழங்கியது போன்றே நாங்கள் நாட்டு வீதிகளுக்கு கார்ப்பெட் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டோம்.

தற்போது இலங்கையில் கார்ப்பெட் இல்லாத கிராமம் ஒன்று இல்லை. திரைப்படம் ஒன்றை இயக்குவதற்கு கூட மண் வீதி ஒன்றை கண்டுபிடிக்க முடியவில்லை என திரைப்பட இயக்குநர்கள் சிலர் கூறினார்கள்.

ஒரு லட்ச கிலோ மீற்றர் நெடுஞ்சாலை அமைக்கும் வேலைத்திட்டம் ஒன்றை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். எந்த பிரச்சினை வந்தாலும் இந்த பயணம் தொடர்ந்து செல்ல வேண்டும். சிறிய கால பகுதிக்கு மக்கள் சர்வதேச சூழ்ச்சியில் ஏமாற்றப்பட்டு எங்களை வீட்டிற்கு அனுப்பினார்கள்.

அதில் ஏற்பட்ட நட்டத்தை சரி செய்துக் கொள்ள வேண்டும். நாட்டில் முன்னோக்கி கொண்டு செல்ல வேலை செய்ய கூடியவர்களை நாங்கள் களமிறக்கியுள்ளோம். அவர்களை தெரிவு செய்வதற்கு மக்கள் கடமைகளை நிறைவேற்றுவார்கள் என நம்புகின்றோம் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தன, காமினி லொக்குகே, கீதாஞ்சன குணவர்தன, மஹேஸ் அல்மேதா, ரவிந்திர ஜயசிங்க ஆகியோர் உட்பட குழுவினர் இணைந்திருந்தனர்.

## ராஜாங்கனை பிரதேச செயலர் பிரிவில் தபால் மூல வாக்களிப்புத் தள்ளிப்போனது

கொரோனா சூழ்நிலை காரணமாக அநுராதபுரம், ராஜாங்கனை பிரதேச செயலர் பிரிவில் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு தபால்மூல வாக்களிப்பு இன்று நாடளாவிய ரீதியில் இடம்பெறவிருந்தது.

இந்நிலையில் இந்தப் பிரதேச செயலர் பிரிவில் இன்று இடம்பெறவிருந்த தபால் மூல வாக்களிப்பு மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அனுராதபுர மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ராஜாங்கனை பிரதேச செயலர் பிரிவிற்கான தபால்மூல வாக்களிப்பு குறித்த புதிய திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு விரைவில் அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

# சமரச அரசியல் என்ற பெயரில் கூட்டமைப்பு சரணாகதி அரசியலையே முன்னெடுக்கிறது

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா காட்டம்

**இனிமேல் தமிழ் மக்களுக்காகப் போராடுவதற்குக் கூட்டமைப்புத் தயாராக இல்லை. அவர்கள் சுகபோக அரசியல் நடாத்தவே விரும்புகின்றர். சமரச அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையே இப்போது கூட்டமைப்பு முன் வைக்கிறது.**

**- இவ்வாறு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் யாழ் மாவட்ட வேட்பாளாரும், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்த ஊரெழுவில் நடைபெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார். தொடர்ந்து பேசுகையில் ரீகாந்த மேலும் தெரிவித்தவை வருமாறு:-**



'அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று சொல்ல முடியாது, போராட்ட காலமென்றால் அடித்துப் பறிக்கலாம், ஜனநாயக வழி அப்படியானதல்ல, பேசித்தான் தீர்க்க வேண்டும், அரசியல் தீர்வுக்காக காத்திருக்கும் இடைப்பட்ட காலத்தில் அபிவிருத்தி பற்றியும் சிந்திக்கவேண்டிய அவசியமுள்ளது, அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக அமைச்சு பதவிகளைப் பெறுவது பற்றி சிந்திக்கவேண்டி வரலாம், அடுத்தது அமைச்சு பதவிகளைப் பெறுவதானால் எத்தனை அமைச்சுக்கள், எந்த அமைச்சுக்கள், அவற்றிற்குள்ளான அதிகாரங்கள் என்ன என்பன பற்றியெல்லாம் நாங்கள் பேரம் பேச வேண்டியிருக்கும், பேரம் பேசுவதற்கு அரசியல் பலம் வேண்டும், அந்தப்பலத்தை எதிர்வரும் தேர்தலில் நாங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும்' - இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளர் தம்பி சுமந்திரன் நேற்று முன்தினம் செம்பியன்பற்றில் பேசியிருக்கின்றமை எமக்கு எந்த ஆச்சரியத்தையும் அளிக்கவில்லை .

கடந்த சில நாள்களாக நாங்கள் வெளியிட்டு வந்த சந்தேகம் இப்பொழுது சுமந்திரனால் பகிரங்கமாகவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான பொதுஜன பெரமுனவுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குமிடையில் அரசியல் உறவு மலரத்தொடங்கியுள்ளாக நாங்கள் சமீபகாலமாக தெரிவித்து வந்துள்ளோம்.

ஜனாதிபதியோடும் அவரின் அரசாங்கத்துடனும் முரண்படாமலும் மோதல் போக்கைக் கடைப்பிடிக்காமலும் சமரசம் செய்து கொள்ளவே கூட்டமைப்பு விரும்புகிறது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தாம் தோற்கடிக்க முயன்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இப்போது சமரசம் செய்து கொண்டு பிரச்சினை இல்லாத அரசியலை நடத்தவே கூட்டமைப்பு தயாராகிறது என்று கூறியிருந்தோம் சுமந்திரனின் பேச்சு எமது கருத்து உண்மையானது என்பதை தெட்டத் தெளிவாக்கியிருக்கின்றது.

தமிழ் மக்களின் சார்பில் ஒற்றுமையாக எங்களை நாடாளுமன்றத்திக்கு அனுப்புங்கள், அங்கே நாங்கள் உங்களுக்காகப் போராடுவோம் என்றெல்லாம் கூறி வந்திருப்பவர்கள் தேர்தலுக்கு பிறகு மீண்டும் அமையப்போகின்ற ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசியல் பலத்தை தாருங்கள் என்று தயக்கம் எதுவுமின்றி கோருகின்ற அளவிற்கு இப்பொழுது சீரழிந்து போயிருக்கின்றார்கள்.

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடே என்று ஜனாதிபதி கோட்டாபயவும் பிரதமர் மஹிந்தவும் இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருந்தனர்.

அவர்களின் இன்றைய அரசாங்கம் சிங்கள பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலைத் தினமும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. இந்த நிலையில் தேர்தலுக்குப் பிறகு வரும் புதிய ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளுக்கு பேரம் பேசுவதற்கு தமக்குப் போதிய அரசியல் பலம் வேண்டும் என்று கூட்டமைப்பு கோருவது வெட்கக்கேடானது

இனிமேல் தமிழ் மக்களுக்காகப் போராடுவதற்கு கூட்டமைப்பு தயாராக இல்லை. அவர்கள் சுகபோக அரசியல் நடத்தவே விரும்புகின்றர்.

சமரச அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையே இப்போது கூட்டமைப்பு முன் வைக்கிறது. நாலரை ஆண்டு கால நல்லாட்சி அரசாங்கத்தின் போது அதற்குத் தலைமை தாங்கிய ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதன் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வெகு விசுவாசமாகக் கூட்டமைப்பின் தலைவர்கள் நடந்து கொண்டனர். மூன்று தடவைகள் அவரின் அரசாங்கம் கூட்டமைப்பினால் காப்பாற்றப்பட்டது. அதற்கு வெகுமதியாக கம்பரெலிய என்ற பெயரில் இவர்களின் தொகுதி அபிவிருத்திக்காக எழுநூறு கோடி ரூபா அள்ளிக்கொடுக்கப் பட்டது. அதையும் கூட ஒரு சாதனையாக இப்போது சுமந்திரன் சுட்டிக்காட்டிப் பேசியிருக் கின்றார் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு கொடுத்த கூட்டமைப்பு தமிழர்களுக்கென்று உருப்படியாக எதையும் சாதிக்கவில்லை.

புதிய அரசமைப்பு தொடர்பான நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போது ஒற்றையாட்சி முறையையும், பௌத்த மதத்திற்கான விசேட அந்தஸ்ததையும் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டது. இதன் தொடர்ச்சியாகவே இப்போது தோற்றுப் போன ரணில் விக்கிரமசிங்கவைக் கைவிட்டு ஆட்சி நடத்தும் ராஜபக்ஷவுக்குத் தனது விசுவாசத்தை மாற்றுவதற்கு தாம் தயார் என இவர்கள் அறிவித்துள்ளனர். இது அப்பட்டமான அரசியல் விபச்சாரமாகும்.

நடந்து முடிந்த போரில் கொன்று குவிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் போராளிகளின் ஆத்மாக்களில் குத்தும் கொடூரச் செயலாகும். இதற்காக முழுப் பொறுப்பையும் கூட்டமைப்பின் தலைவர்களாகக் கருதப்படும் சம்பந்தர், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோர் ஏற்றுக் கொண்டேயாகவேண்டும்.

இந்தக் கூட்டமைப்பு இனிமேலும் தமிழ் மக்களுக்கு தேவையா என்பது தான் இப்போது உள்ள கேள்வி.

எமது இனத்தின் உரிமைகளுக்கான அரசியல் போராட்டத்தை இடை நடுவில் கைவிட்டுவிடாமல், உறுதியுடனும், நிதானத்துடனும், தொடர்ந்து நடத்தினால் நிச்சயம் நாம் வெற்றி பெற முடியும். இதை உணர்ந்து தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் சரியான தீர்ப்பினை வழங்க வேண்டும். - என்றார்.

# கொரோனாவின் இரண்டாம் அலை வடக்கைத் தாக்கும் ஆபத்து உண்டு

## டாக்டர் யமுனானந்தா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை13

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாம் அலையின் முதலாம் படி மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில், வடக்கு மாகாணத்திலும் அதன் தாக்கம் ஏற்படும் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் எஸ்.யமுனானந்தா எச்சரிக்கை செய்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடமகாணாத்தில் கொரோனாவின் இரண்டாம் அலை பரவக் கூடிய ஏது நிலை உள்ளது. மக்கள் இது தொடர்பில் விழுப்பாக இருக்கவேண்டும்.

சமூக இடைவெளியைப் பேணாத காரணத்தால் இதன் தாக்கம் ஏற்படக்கூடிய நிலை உருவகலாம். இதனால் பொதுமக்கள் ஒன்று கூடுதல், தேவையற்ற பிரயாணங்களை தவிர்க்க வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த மருத்துவர்களுக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை. தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொரோனாத் தொற்று தொடர்பில் ஆராயும் மூலக்கூற்று பரிசோதனை தினம் தோறும் மேற்கொள்ளப்படுகிறது.

தினமும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து நாளாந்தம் 50 - 90 வரையானவர்களின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

பொது மக்கள் முகக் கவசங்களைக் கட்டாயமாக அணிய வேண்டும். மேலும் சமூக இடைவெளிகளைப் பின்பற்ற வேண்டும். - என்றார்.

# இன்று யாழில் அமிர், யோகேஸ் நினைவு தினம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான அமரர் அ.அமிர்தலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வெ.யேகேஸ்வரன் ஆகியோரின் 31 ஆவது நினைவு தின நிகழ்வு, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெறும்.

இந்த நினைவுதின நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவார்.



# திருச்சியில் கடும் மழைப்பொழிவு வீதித் தடுப்புச் சரிந்ததால் சேதம்!



இந்தியாவின் திருச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலையில் ஆரம்பித்து இரவு வரை பெய்த கடும் மழையால், கோட்டை ரயில் நிலைய மேம்பாலத்தின் வீதியோரத் தடுப்புச் சுவர் சரிந்து சேதமடைந்தது. சுமார் 150 ஆண்டுகள் பழமையான குறித்த தடுப்புச் சுவர் தரைக்குள் புதைந்து சரிந்து சேதமடைந்தது. இந்த மேம்பாலத்தை அகற்றி விட்டு புதிய மேம்பாலம் விரைவில் கட்டப்படவுள்ளது.

ஆனால், இந்த மேம்பாலம் திருச்சி மாநகரின் மிக முக்கிய வீதிகளில் ஒன்றாக இருப்பதால், மாநகராட்சி ஊழியர்கள், நெடுஞ்சாலைத் துறையினர் விரைந்து வந்து எச்சரிக்கை ஸ்டிக்கர் ஒட்டியதுடன், சேதமடைந்த பகுதியைத் தற்காலிகமாகச் சீரமைக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். திருச்சி மாவட்டத்தில் பெய்த இந்தக் கடும் மழையால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. திருச்சி மாவட்டத்தில் அதிகபட்சமாக பொன்மலையில் 108.40 மில்லிமீற்றர் மழை பதிவாகியது.

# கொரோனாவால் உயிரிழந்த நபரை ஆட்டோவில் ஏற்றிச் சென்ற சம்பவம்





கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்த ஒருவரின் உடலை தலையும் காலும் வெளியே தெரியுமாறு முச்சக்கர வண்டிக்குள் புகுத்தி ஏற்றிச் சென்ற சம்பவம் இந்தியாவில் நடந்தது. தெலங்கானா மாநிலத்தின் நிஜாமாபாத் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நிஜாமாபாத் அரச மருத்துவமனையில் 50 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். அவரது சடலத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கு நோயாளர் காவு வண்டியை நாடாமல் அவரது உறவினர் ஒருவர் அந்த உடலை முச்சக்கர வண்டிக்குள் புகுத்தி எடுத்துச் சென்றுள்ளார்.

இதுகுறித்து நிஜாமாபாத் அரச மருத்துவமனையின் கண்காணிப்பாளர் மருத்துவர் நாகேஸ்வர ரா தெரிவித்ததாவது: உயிரிழந்த அந்த நபர், இந்த மருத்துவமனையில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் உறவினராவார். உயிரிழந்த தன்னுடைய உறவினரின் உடலைத் தன்னிடம் ஒப்படைக்குமாறும், தான் கொண்டு சென்று அடக்கம் செய்கிறேன் என்றும் மருத்துவமனையில் பணியாற்றும் அந்த ஊழியர் எங்களிடம் கேட்டுக்கொண்டார்.


அதன் அடிப்படையில் அவரிடம் உயிரிழந்தவரின் உடல் ஒப்படைக்கப்பட்டது என்றார். நோயாளர் காவு வண்டிக்காகக் காத்திருந்தால் தாமதமாகும் என்பதால், முச்சக்கர வண்டியில் சடலத்தைப் புகுத்திக் கொண்டு சென்றேன் என்று அந்த உறவினர் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றால் ஒருவர் உயிரிழந்தால், அவரை எவ்வாறு பாதுகாப்புடன் அடக்கம் செய்ய வேண்டும், அடக்கம் செய்யும்போது எத்தகைய பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று இந்திய சுகாதாரத்துறை அமைச்சகம் பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ள நிலையிலும் இந்தியாவில் இதுபோன்ற செயல்கள் ஆங்காங்கே பதிவாகி வருவது குறிப்பிடத்தக்கது.

## தங்கக் கடத்தல் விவகாரம்

# நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார் தலைமறைவான ஸ்வப்னா சுரேஷ்!





கேரளா தங்கக்கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட ஸ்வப்னா சுரேஷ் மற்றும் சந்தீப் நாயர் ஆகியோர் என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். கேரள மாநிலத் தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள ஐக்கிய அரபு இராச்சியத் தூதரகத்தின் பெயரில் விமானத்தில் கடத்தி வரப்பட்ட 30 கிலோ தங்கக்கட்டிகள் சுங்க அதிகாரிகளிடம் சிக்கின. இந்த வழக்கைத் தேசிய புலனாய்வு முகமை(என்.ஐ.ஏ) விசாரித்து வருகிறது.

மேலும், வழக்கில் தொடர்புடைய ஸ்வப்னா, சரித், சந்தீப் நாயர், பைசல் பேரத் ஆகிய நான்கு பேர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் தூதரக முன்னாள் ஊழியர் சரித்குமார், அவரது கூட்டாளி சந்தீப் நாயரின் மனைவி சௌமியா ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்பட்ட தூதரகத்தின் முன்னாள் ஊழியரும், கேரள அரசின் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றி வந்த வருமான ஸ்வப்னா சுரேஷ் என்ற பெண் தலைமறைவாகியிருந்தார். நாகலாந்துக்குத் தப்பிச் செல்லவிருந்த நிலையில் தேசிய புலனாய்வு அமைப்பான என்.ஐ.ஏ. அதிகாரிகள் பெங்களூரில் வைத்து நேற்று முன்தினம் அவரைக் கைது செய்தனர்.

மேலும், ஸ்வப்னாவின் குடும்பத்தினரையும் அதிகாரிகள் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். மேலும், வழக்கில் தொடர்புடைய மற்றொரு குற்றவாளியான சந்தீப் நாயரையும் நேற்று இரவே என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அனைவரிடமும் முதல்கட்டமாக விசாரணை நடைபெற்றது. இந்நிலையில், கைது செய்யப்பட்ட ஸ்வப்னா, சந்தீப் ஆகிய இருவரும் தற்போது கொச்சியில் உள்ள என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## சாத்தான்குளம் கொலை வழக்கில் மேலும் 5 பொலிஸார் பணி நீக்கம்

தூத்துக்குடி மாவட்டத்தின் சாத்தான்குளத்தைச் சேர்ந்த தந்தை மகன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பொலிஸாரில் 5 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். சாத்தான்குளத்தில் கைது செய்யப்பட்ட வியாபாரிகளான ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

இந்த வழக்கில் 10 பொலிஸார் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. இந்த நிலையில் இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சிறப்புப் பொலிஸ் உதவி ஆய்வாளர் பால்துரை, சாமதுரை, செல்லதுரை, தோமஸ் பிரான்சிஸிஸ், வெயிலுமுத்து பொலிஸார் என 5 பேரையும் பணியிடை நீக்கம் செய்து தூத்துக்குடி மாவட்டச் சிறப்புப் பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டார்.

சாத்தான் குளம் விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போலி வங்கிக் கிளை!

## இந்தியாவில் நூதன மோசடி



இந்தியாவின் கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் பாரத ஸ்டேட் வங்கிக் கிளை என்ற பெயரில் போலி வங்கி ஒன்றை நிறுவ முயன்று, வங்கி பதிவேடுகள், முத்திரைகள், படிவங்கள் அனைத்தையும் போலியாக தயார் செய்த, முன்னாள் அரச வங்கி மேற் பார்வையாளரின் மகன் உட்பட மூன்று பேரைப் பண்ருட்டிப் பொலிஸார் கைது செய்தனர்.

போலியாக வங்கிக் கிளை ஒன்றை ஏற்பாடு செய்த குற்றத்தில் கமால்பாபு, குமார், மாணிக்கம் ஆகியோர், கிளைப் பெயரில் பதிவேடுகள், வங்கி முத்திரைகள், பணம் பரிவர்த்தனை செய்யும் படிவங்கள் என அனைத்தையும் போலியாகத் தயார் செய்த நிலையில் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டனரல்.

மேலும், பாரத ஸ்டேட் வங்கியின், பண்ருட்டி வடக்கு பஜார் கிளை என்ற பெயரில் இணையதளத்தையும் உருவாக்கியுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. இதனையடுத்து, கமால்பாபு (வயது 19), அவருக்கு வங்கி முத்திரைகள், படிவங்கள் தயார் செய்ய உதவி புரிந்த பண்ருட்டியைச் சேர்ந்த ஈஸ்வரி இறப்பர் முத்திரை உரிமையாளர் மாணிக்கம் (வயது 52), அருணா அச்சகம் உரிமையாளர் ஏ.குமார் (வயது 42) ஆகிய 3 நபர்களைக் பொலிஸார் கைது செய்தனர்.

# மோடி திறந்த மின் திட்டம் ஆசியாவிலேயே பெரியதா?

## ராகுல் காந்தி கேள்வி

இந்தியாவின் மத்தியபிரதேச மாநிலம் ரேவா நகரில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்த 750 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய மின்சக்தித் திட்டத்தைத் திறந்து வைத்தார். இந்தத் திட்டம் ஆசியாவிலேயே பெரியது என்று அறிவிக்கப்பட்டது.

இதையடுத்த கர்நாடக மாநிலத்தில் 2 ஆயிரம் மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட பவகடா சூரிய மின்சக்தி திட்டம் 2 ஆண்டுகளுக்கு முன் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே பெரியது ரேவா சூரிய மின்சக்தி திட்டமா? அல்லது பவகடா சூரிய மின்சக்தி திட்டமா? என்பதற்கு மத்திய மின்சார துறை அமைச்சர் பதில் அளிக்க வேண்டும் என்று கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவகுமார் கீச்சகப் பதிவு ஒன்றை இட்டார்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியும் இந்த பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பியுள்ளார். பிரதமர் அலுவலகம் வெளியிட்ட பதிவை இணைத்துக் கீச்சகப் பதிவு ஒன்றை வெளியிட்ட ராகுல் காந்தி, அதில், பிரதமர் மோடியை 'அசத்யாகிரகி' (பொய் சொல்வதை வழக்கமாக வைத்திருப்பவர்) என்று குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவின் சட்டத்துக்கு எதிராக ஹொங்கொங்கில் வாக்கெடுப்பு!



## 5லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் அணி திரள்வு

சீனாவால் ஹொங்கொங் மீது விதிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புச் சட்டம் குறித்துக் ஹொங்கொங்கின் எதிர்க்கட்சி இந்த வார இறுதியில் அடையாள வாக்கெடுப்பு ஒன்றை முன்னெடுத்தது. அதில் வாக்களிப்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான ஹொங்கொங் மக்கள் திரண்டனர். சீனாவின் புதிய சட்டத்தால் தூண்டப்பட்டுச் சீனாவுக்கு எதிரான உணர்வை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஹொங்கொங்கின் எதிர்க்கட்சியினர் சார்பில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்த வாக்கெடுப்பின் மூலம் எதிர் வரும் செப்டம்பர் மாதம் நடக்கவுள்ள சட்டமன்ற சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கும், சீனச் சார்பு போட்டியாளர்களிடமிருந்து முதன்முறையாகக் ஹொங்கொங்கின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்கும் ஜனநாயக சார்பு வேட்பாளர்களுக்கு இந்த அதிகாரப்பூர்வமற்ற வாக்கெடுப்பு உற்சாகமளிக்கும் என்று கூறப்படுகிறது. சீனச் சட்டத்துக்கு எதிராக அதிகப் படியான வாக்குப்பதிவு நிகழ்ந்தால் அது சர்வதேச சமூகத்திற்கு மிகவும் வலுவான சமிக்ஞையை அனுப்பும், நாங்கள் ஹாங்காங்கர்கள் எமது நகரத்தை ஒருபோதும் கைவிடமாட்டோம்' என்று ஹொங்கொங்கைச் சேர்ந்த 24 வயதான சன்னி சியுங் கூறினார்.

இந்த நிலையில், 7.5 மில்லியன் மக்கள் தொகை கொண்ட நகரத்தில் நேற்றுப் பிற்பகலுக்குள் 5இலட்சம் பேர் வாக்களித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. திங்கட்கிழமை காலை இந்த வாக்கெடுப்பின் முடிவுகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அருங்காட்சியகம் மசூதியானது

# துருக்கியின் செயலால் பாப்பரசருக்குக் கவலை!



துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள ஹாகியா சோபியா அருங்காட்சியகத்தை மசூதியாக மாற்றிய துருக்கியின் முடிவால் தான் காயமடைந்ததாகப் பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்தார். இஸ்தான்புல்லைப் பற்றி நினைக்கையில் சாண்டா சோபியா குறித்து நான் மிகவும் வேதனையடைகிறேன் என்று சென் பீட்டர்ஸ் சதுக்கத்தில் தனது வாராந்த ஆசீர்வாதத்தின் போது பாப்பரசர் மேலும் கூறினார்.

குறித்த கட்டடத்தை வழிபாட்டுத் தலமாக (மசூதி) அறிவித்த துருக்கியின் ஜனாதிபதி தயிப் எர்டோகன் ஜூலை மாதம் 24ஆம் திகதி அங்கு முதல் பிரார்த்தனை நடத்தப்படும் என்று கூறியுள்ளார்.

பண்டைய நினைவுச்சின்னமான குறித்த கட்டடத்தை மசூதி என்று அவர் அறிவித்த பின்னர் அதுவரை அருங்காட்சியகமாக இருந்து வந்த அந்தக் கட்டடம் குறித்து எர்டோகன் தனது முடிவை மாற்றியமைக்க வேண்டும் என்று உலகத் தேவாலயங்கள் அமைப்பு அழைப்பு விடுத்தது.

இஸ்தான்புல்லைத் தளமாகக் கொண்ட உலகின் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்களின் ஆன்மீகத் தலைவரான பேட்ரியார்ச் பார்தலோமெவ் இந்த விடயம் ஏமாற்றமளிக்கிறது என்று கூறினார். இந்த நிலையிலேயே பாப்பரசரின் கருத்து வெளிவந்திருக்கிறது.





# சீனாவில் தொடர்கிறது கடும் மழை

சீனாவின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்து வருவதைத் தொடர்ந்து அங்கு வெள்ள அபாய எச்சரிக்கை இரண்டாம் நிலையை எட்டியுள்ளது. சீனாவில் கடந்த சில நாள்களாகப் புயலுடன் கூடிய கடும் மழை பெய்துவருகிறது. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கனமழை காரணமாகச் சில பகுதிகளில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. வீதிகள், விவசாய நிலங்கள் கடும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளன. தொடர்ந்து அங்கு கடும் மழைக்கான சூழல் நிலவி வருவதால் ஹூபே மாகாணத்தில் சியானிங் மற்றும் ஜிங்ஜோ ஆகிய நகரங்களிலும், ஜியாங்சி மாகாணத்தில் நாஞ்சாங் மற்றும் ஙாங்ராவ் ஆகிய நகரங்களுக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீனாவின் பல இடங்களில் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகிறது. வெள்ள அபாய எச்சரிக்கை இரண்டாம் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை மழையை ஒட்டிய இந்த இடரால் 140க்கும் அதிகமானவர்கள் காணாமல் போயுள்ளனர்.

*சீனாவின் வுஹான், ஹூபே மாகாணத்தில் பெய்த கடும் மழை காரணமாக யாங்சி ஆற்றின் கரையில் உள்ள ஆலயம் ஒன்று நீரில் மூழ்கியது. அதன் அருகே மக்கள் நீந்தியவாறு வெள்ளத்தில் தத்தளிக்கின்றனர்.*






# விபச்சார விடுதிகளைத் திறவுங்கள் பாலியல் தொழிலாளர்கள் போராட்டம்

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் முகமாகப் பல மாதங்களாக மூடப்பட்டுள்ள விபச்சார விடுதிகளை மீண்டும் திறக்க அனுமதிக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் மாலை ஜேர்மனின் ஹாம்பர்க் நகரின் சிவப்பு விளக்கு மாவட்டத்தில் பாலியல் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விபச்சாரத்தைச் சட்டபூர்வமான விடயமாக ஆக்கியுள்ள ஜேர்மனியில் கடைகள், உணவகங்கள் மற்றும் பார்கள் அனைத்தும் மீண்டும் திறக்கப் படுவதால், பாலியல் தொழிலாளர்கள் தங்களுக்கு விதிக்கப் பட்ட தடைகளையும் நீக்குமாறு கோருகின்றனர். அதிக உடல் நல அபாயத்தை ஏற்படுத்தாவிட்டாலும் இந்தக் கொரோனா முடக்கத்தால் தாங்கள் தனிமைப் படுத்தப்பட்டு வாழ்வாதாரத்தை இழக்கிறோம் என்று கூறுகின்ற அவர்கள் எங்கள் தொழிலுக்கு உங்கள் உதவி தேவை என்று கோசமிட்டபடி ஒரு விபச்சார விடுதிக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் சிலர் முகமூடிகளை அணிந்திருந்தனர். உரிமம் பெற்றவளாகங்களைத்தொடர்ந்து மூடுவதால் விபச்சாரிகள் வீதிகளில் இறங்கும் நிலை உருவாகியுள்ளது. இது சட்டவிரோதமானதுஎன்று இந்தப்போராட்டத்தை ஏற்பாடு செய்த பாலியல் தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்தது.

# வாக்குகள் விலைபோவதை நாம் தடுத்து நிறுத்துவோம்

## தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

கொழும்பு, ஜூலை 13

எமது வாக்குகள் விலைபோவதை தடுத்து நிறுத்துவோம் எனப் பகிரங்க அறிக்கை ஒன்றின் மூலம் தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக பேரவை விடுத்திருக்கும் கோரிக்கையின் முழு விவரம் வருமாறு:-

ஒரு நியாயமான தீர்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தேர்தல் அரசியலினால் கட்சிகளுக்குள்ளேயும் கட்சிகளுக்கிடையேயும் எழுந்துள்ள ஒற்றுமைக்குலைவு ஒரு வேதனையான விடயமாக அமைந்திருக்கிறது. இன்றைய எமது நிலையில் குழுக்களாகப் பிரிந்து நின்று சுயநலத் தேர்தல் அரசியல் செய்வது ஆரோக்கியமான அணுகுமுறையாக அமையாது.

எமது வாக்குகள் அற்ப சலுகைகளுக்காக விலை பேசப்படும் இந்த நிலையிலே எமது தேசிய நலனில் அக்கறை கொண்டுள்ள நாம் பிரிந்து நின்று சண்டையிடுவதற்கான காரணங்களைத் தேடுவதிலும் பார்க்க ஒற்றுமைப்பட வேண்டியதற்கான அவசியத்தையும் அதன் அனுகூலங்களையும் ஆராய்வது ஆரோக்கியமானதாக அமையும்.

எமக்கு நியாயப்படியும் சட்டப்படியும் கிடைக்க வேண்டிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஒழுங்குவிதிக்கமைய தரமறுத்து, அவற்றை தமது முகவர்களின் ஊடாக குழப்பமான முறையில் நடைமுறைப்படுத்த முயன்று அவற்றை எமக்கு வழங்கப்படும் சலுகைகளாக சித்திரிக்கும் முயற்சிகள் தொடர்கின்றன. அதனைச் செய்யும் அந்த முகவர்கள் செயல் வீரர்கள் போல நம் மத்தியிலே உலா வருகின்றனர்.

வறுமையையும் சமூக சிக்கல் நிலைகளையும் எம்மக்கள் மத்தியிலே திட்டமிட்டு ஏற்படுத்திவிட்டு அதை தீர்க்கவென தற்காலிக போலிச் சலுகைகளைக் காட்டி அவர்களின் வாக்குகளை விலைபேச முயல்வது மனிதத்துவம் ஆகாது.

தமது வறுமையைப் போக்கவென தமது வாக்குகளைச் சலுகைகளுக்காக விற்கும் எம்மவர்களைக் கோபித்துக் கொள்வதும் அர்த்தமற்றது. அந்தச் சூழ்நிலைக் கைதிகளின் நிலையையும் நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. பல்வேறு அழுத்தங்களால் தடம் மாறி நிற்கும் மக்கள், எம் மக்கள் அல்லர் என்று ஆகிவிடாது. அவர்களையும் தடம் மாற்றி சலுகைகளுக்காக எமது வாக்குகள் விலைபோகாது என்பதை சரியான முறையில் எமது வாக்குரிமையைப் பயன்படுத்தி நிரூபிப்போமாக இருந்தால் எதிர்காலத்தில் இவ்வாறு விலை பேசும் செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்ள முடியும். இது எமது விடியலை நோக்கிய பயணத்திற்கு உரம் சேர்க்கும். எலும்புத் துண்டையும் உணவுத் துண்டையும் காட்டி தமது ஆட்டத்திற்கு ஆட்டி வைக்கப்படும் வட்டரங்கு விலங்குகள் (Circus animals) போல நாம் இல்லை என்பதை தெளிவாக்கும்.

பொது விடயங்கள் மற்றும் அடிப்படை பிரச்சினைகள் சம்பந்தமாகவேனும் நாம் ஒற்றுமைப்படாவிட்டால் நாம் பிரித்தாளப்பட்டு எமது அபிலாசைகள் சிதைக்கப்படுவதற்கான ஆபத்து நிலை இருக்கிறது. கோணேசர் கோயிலும், நல்லூர் ஆலயமும் கூட நம் பூர்வீகமல்ல என வாதிடுபவர்களுக்குக்கூட இது வரப்பிரசாதமாக அமைந்துவிடும். இந்த ஒற்றுமைக்காகத் தமிழ் மக்கள் பேரவையானது அனைத்துத் தமிழ் தலைவர்களுடனும் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தி இருக்கிறது. இந்த முயற்சிகள் தொடரும்.

இந்த முயற்சி வெற்றி பெறுவதற்கு சரியான திசையில் சிந்திக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பெரும் பொறுப்பு தமிழ் மக்கள் முன் எழுந்து நிற்கிறது. அரசியல்வாதிகளின் குறுகிய சுயநல சிந்தனைப் போக்குகள் காரணமாகவும் மாறிவரும் நெருக்கடியான அரசியல் சூழ்நிலை காரணமாகவும் எம்மக்கள் மனமுடைந்து விரக்தியடைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. இதன் காரணமாக சரியாகச் சிந்தித்து வாக்களிக்கும் திறன் உடைய பலர் வாக்களித்து என்ன பயன் என்று எண்ணி வாக்களிக்காமல் இருந்து விடுவார்களோ என்ற ஏக்கம் எம்மத்தியில் எழுகிறது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் விலைபோன வாக்குகளால் மட்டுமே எமது பிரதிநிதிகள் எனப்படுவோர் தெரிவாகும் ஓர் ஆபத்து நிலை இருக்கிறது. அவ்வாறு நடந்தால் அது ஒரு பிழையான செய்தியை உலகிற்கு தெரிவிப்பதாக அமைந்துவிடும்.

எனவே எத்தனையோ இடர்களைத் தாண்டி பயணித்த நாம் மனம் சோர்ந்து போகாது ஒரு தூய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக அனைவரும் அணிதிரண்டு சிந்தித்து வாக்களிப்போம். நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும் தவறாமல் சிந்தித்து வாக்களிக்கத் தூண்டுவோம். எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்வோம். - என்று உள்ளது.

## இலங்கையின் 2ஆவது நீருக்கடியிலான அருங்காட்சியகம் திருகோணமலையில்





இலங்கையில் இரண்டாவது நீருக்கடியிலான அருங்காட்சியகம் திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த அருங்காட்சியகத்தை கடற்படைத்தளபதி பியல் டி சில்வா கடந்த வெள்ளியன்று உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்துள்ளார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் சென்டிபே கடற்கரை கவருவதால், அக் கடற்கரையை அண்டியதாக இந்தக் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது எனக் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுமார் 60 அடி ஆழத்தில் 150 அடி நீளத்தில் 85 அடி அகலத்தில் குறித்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதியின் முழுமையான மேற்பார்வையின் கீழ், கடற்படையினரின் பூரண ஒத்துழைப்புடன் குறித்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி பவளப்பாறைகள் உருவாகுவதை ஊக்குவிக்கும் என்பதோடு, மீன்வளத்தை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் தற்போது இப்பிரதேசத்தை அண்டிய பகுதியில் மீன் இனப்பெருக்கம் ஆரம்பமாகியுள்ள நிலையில், மிக விரைவில் சுற்றுலாப் பயணிகளுக்கு இப்பிரதேசத்தில் சுழியோடுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

ஆயினும், இப்பகுதியில் தற்போது மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், மீன் இனப் பெருக்கப் பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டவுடன், மீனவர்களுக்கு உச்சபட்ச நன்மைகள் கிடைப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும் எனவும் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் நீந்துபவர்களுக்கும் நீராடுபவர்களுக்கும் தனித்துவமானதொரு பார்வையிடும் அனுபவத்தை குறித்த அருங்காட்சியகம் வழங்கும் எனவும் கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, எதிர்காலத்தில் இதுபோன்ற மற்றுமொரு நீருக்கடியிலான அருங்காட்சியகத்தை, தங்காலை பிரதேசத்தில் நிர்மாணிக்கக் கடற்படை திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே காலி பகுதியில் இலங்கையின் முதலாவது அருங்காட்சியகத்தை கடற்படையினர் நிர்மாணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## வவுனியா பம்மைமடு முகாமில் இருவருக்குத் தொற்று உறுதி

வவுனியா பம்மைபடு தனிமைப் படுத்தல் முகாமில் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனைகள் முடிவுகள் நேற்று இரவு 8.30 மணிக்கு வெளியாகிய நிலையில் இக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் வவுனியா பம்மைமடு தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த 32 பேருக்கும் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 55 பேருக்கும் என மொத்தமாக 87 பேருக்கு பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் வவுனியா பம்மைமடு தனிமைப்படுத்தல் முகாமை சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை யாழ்ப்பான போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (உ-100)

# பிரதான குற்றவாளிகளின் மறைவிடம் நாடாளுமன்றே



## அநுரகுமார சாடல்

கொழும்பு, ஜூலை 12

நாட்டிலுள்ள பிரதான குற்றவாளிகள் மறைந்திருக்கும் இடமாக நாடாளுமன்றம் மாறியுள்ளது எனத் தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொரலஸ்கமுவையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டு மக்கள் நாடாளுமன்றத்தில் இருப்பவர்களை வெறுப்புடன் பார்ப்பதற்கு இதுவே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள். இதனால், அதற்கான பொறுப்பு மக்களுக்கு இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 'மொட்டு'வின் பிரசாரம் தற்காலிகமாக நிறுத்தம்

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் 13, 14 மற்றும் 15ஆம் ஆகிய தினங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொள்ளவிருந்த அனைத்துத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இம்முறை தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஏற்பாடு செய்துள்ள பிரசாரக் கூட்டங்களை மட்டுப்படுத்துமாறும், அவ்வாறு பிரசாரக் கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சிறுத்தைப் புலி பலி



அப்புத்தளை - யாகலபெத்த வழியில் விபத்தொன்றில் சிக்கி இரண்டரை அடி நீளச் சிறுத்தைப் புலியொன்று பரிதாபகரமாக பலியான சம்பவமொன்று இன்று இடம்பெற்றுள்ளது.

யாகலபெத்த பெருந்தோட்ட பகுதியிலிருந்து தப்பியோடி வந்த சிறுத்தை புலி பாதையில் சென்ற வாகனமொன்றில் மோதி பலியானது. இது குறித்து அப்பகுதி மக்கள் அப்புத்தளை பொலிஸாருக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் அறிவித்தனர்.

இதையடுத்து அவர்கள் அவ்விடத்திற்கு வந்து பலியான சிறுத்தைப் புலியின் உடலை மீட்டுச் சென்றனர். பொலிஸாரும் வனஜீவராசிகள் திணைக்களத்தினரும் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறுத்தைப் புலி மீது மோதிய வாகனம் குறித்து எத்தகைய தகவலும் கிடைக்கவில்லை.

# அமிதாப்பச்சன் குணமடைய பிரார்த்திக்கின்றார் மஹிந்த



பிரபல இந்திய திரைப்பட நடிகர் அமிதாப்பச்சன் மற்றும் அவரது புதல்வரும் நடிகருமான அபிஷேக்பச்சன் ஆகியோர் சிறந்த உடல் நலத்துடன் விரைவாக குணமடைய, அவர்களுக்காக பிரார்த்திப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நடிகர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு அவர்கள் இந்தியாவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பது தொடர்பில் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் பிரதமர் இதனைக் கூறியுள்ளார்.

77 வயதான நடிகர் அமிதாப்பச்சனுக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் மும்பாயில் உள்ள நானாவதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொரோனா பரிசோதனை மேற்கொண்டபோது அமிதாப்பச்சன் மற்றும் அவரது புதல்வருக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதியானது. அதே வேளை, அமிதாப்பச்சனின் மனைவி ஜஸ்வர்யா ராய்க்கு கொரோனா வைரஸ் தொற்றவில்லை எனவும் பரிசோதனைகளில் உறுதியானது.

கடந்த 10 நாள்களாக தன்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனது குடும்பத்தினருடன் கொரோனா பரிசோதனைகளை செய்துகொள்ளுமாறு அமிதாப்பச்சன் தனது ருவிட்டர் பக்கத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மொரட்டுவை துப்பாக்கிச்சூடு: பொலிஸார் மூவர் பணி நீக்கம்

## பாரபட்சமின்றி விசாரணை எனப் பேச்சாளர் உறுதி

கொழும்பு, ஜூலை 12

மொரட்டுவை, லுனாவ பிரதேசத்தில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து, அங்குலானை பொலிஸார் மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் இடம்பெற்ற வேளையில் கடமையில் இருந்த பொலிஸ் சார்ஜண்ட், பொலிஸ் கான்ஸ்டபிள், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஆகியோரே இன்று முதல் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு இணங்க, கல்கிஸை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்த மூவரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில் மொரட்டுவை, லுனாவ பிரதேசத்தில், அங்குலானை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரினால், திடீரென வீதித் தடை ஏற்படுத்தி வாகனங்கள் சோதனையிடப்பட்டன.

இதன்போது, 02 ஓட்டோக்களை வழிமறித்து சோதனைக்கு உட்படுத்திய வேளையில், ஓர் ஓட்டோவில் வந்தவர் அத்துமீறி செயற்பட்டதன் காரணமாக, பொலிஸாரினால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இதில் படுகாயமடைந்த குறித்த நபர், களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மொரட்டுவையைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தவரான நான்கு பிள்ளைகளின் தந்தையே (வயது 39) இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலும், இந்தச் சம்பவத்தின்போது, மகனும், அவரது சகோதரனும் குறித்த ஓட்டோவில் இருந்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நபரின் பிரேத பரிசோதனை நேற்று களுபோவில வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது. தலையில் துப்பாக்கிச் சூடுபட்டதன் காரணமாக மரணம் இடம்பெற்றுள்ளது எனப் பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

ஆயினும், சம்பவம் நடந்த இடத்திலிருந்து மரணமடைந்தவரின் சகோதரர் இது குறித்து தெரிவிக்கையில் - பொலிஸார் மூவரும் போதையில் இருந்தார்கள். அவர்கள் தங்களிடம் ஓட்டோ ஆவணங்களைக் கோரினார்கள். இதன்போது குறித்த ஆவணம் செல்லுபடியற்றது என எங்களுடன் வாக்குவாதம் செய்தனர். அதில் ஒரு பொலிஸார் எனது சகோதரனைத் தாக்க முற்பட்டார். அதன்போது எங்களைத் தாக்க எவ்வித அதிகாரமும் இல்லை எனத் தெரிவித்து பதிலுக்கு அவரை எனது சகோதரன் தள்ளினார். இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் எல்லோர் மீதும் சுட ஆரம்பித்தனர். எனினும், நானும் எனது சகோதரனின் மகனும் அங்கிருந்து தப்பியோடி விட்டோம். சகோதரன் மட்டும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார் - என்றார்.

இது தொடர்பில் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், நேற்றிரவு அங்குலானை பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எவ்வித பாரபட்சமும் இன்றி விசாரணை நடத்தப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

நாளை மொரட்டுவை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மரண விசாரணையில் சாட்சியம் வழங்குவதற்காக, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

# மாட்டு சாணத்தில் இருந்து வெளியேறிய விஷ வாயு தாக்கி இளைஞர் ஒருவர் சாவு

## வவுனியா, சேமமடு பகுதியில் சம்பவம்

(ந.லோகதயாளன், கி.வசந்தரூபன்)

யாழ்ப்பாணம், ஜூலை 12

வவுனியா, சேமமடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் பல மாதங்களாக குவிக்கப்பட்டிருந்த மாட்டு சாணத்தில் இருந்து வெளியேறியதாக கருதப்படும் விஷ வாயு தாக்கியதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் எஸ்.ரஞ்சிதகுமார் என்னும் 28 வயது இளைஞனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ஓமந்தை சேமமடுப் பகுதியில் சிலர் இணைந்து பாரவூர்தி ஒன்றில் மாட்டு எருவினை பசளைக்காக எடுத்துச் செல்லும் நோக்கில் ஏற்றியுள்ளனர். இவ்வாறு ஏற்றிய இளைஞர்களில் ஒருவர் இளைப்பாறுவதற்காக அந்த சாணிக் கும்பத்தின் மேல் அமர்ந்துள்ளார்.



இதன்போது மாட்டு கழிவில் இருந்து வெளியேறிய விசவாயு காரணமாக மூச்சு திணறல் ஏற்பட்ட நிலையில் உடனடியாக ஓமந்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு அவசர சிகிச்சையளிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் மேலதிக சிகிச்சைக்காக இளைஞன் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

எனினும் இளைஞன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்னரே மரணமடைந்துவிட்டான் என வைத்தியசாலையில் வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இரண்டாகப் பிளந்தது 'யானை' 'மொட்டு'வின் வெற்றி நிச்சயம்

## மஹிந்த ராஜபக்ஷ அதீத நம்பிக்கை



கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு அணிகளாகப் பிளவுப்பட்டுள்ளதன் காரணமாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வெற்றி உறுதியானது என்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

களுத்துறையில் அவரின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலத்தில் நடந்தது போல் அரசியல் பழிவாங்கல்கள் எதிர்காலத்தில் நடைபெறாது. எனினும், தகுதி தராதரமின்றி குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு அணிகளாக பிளவுப்பட்டுள்ளதன் காரணமாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வெற்றி உறுதியானது என்பதைக் காணக் கூடியதாக உள்ளது. எப்படியான தடைகள் வந்தாலும் நாட்டை இலக்கு நோக்கிய அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், சிலர் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக கொரோனா வைரஸ் தொற்று நோய் சம்பந்தமாகப் பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால், மக்கள் இது சம்பந்தமாக அவதானத்துடன் இருக்க வேண்டும்.

உலகம் முழுவதும் பரவியுள்ள கொரோனா வைரஸ் தொற்று நோயை அரசு வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளது. எதிர்காலத்திலும் அரசு இது தொடர்பாக அவதானத்துடன் இருந்து, தொற்று நோயைக் கட்டுப்படுத்த அனைத்துப் பலத்தையும் பயன்படுத்தும்.

தொற்று நோய் முடிவுக்கு வந்துவிட்டது என்று கருதாமல், அனைவரும் கவனமாகச் சுகாதாரப் பழக்கங்களை சரியாகப் பின்பற்ற வேண்டியுள்ளது.

இப்படியான நிலைமையில்கூட நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசால் மாத்திரமே முன்னெடுக்க முடியும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

# யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் புனரமைக்கப்பட்ட கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் புனரமைக்கப்பட்ட கட்டடம் நேற்று ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்.

இந் நிகழ்வில் யாழ் மாநகர முன்னாள் ஆணையாளரும், கிழக்கு மாகாண பிரதம செயலாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான பொ.பாலசிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது விருந்தினர்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

இந் நிகழ்வில் மதத் தலைவர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும்

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அம்பாறையில் நேரில் சென்று ஆய்வு







உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலை தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கும் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்விசாரணை நடவடிக்கையின் போது சனிக்கிழமை காலை முதல் மாலை வரையான காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது தற்கொலை தாக்குதலுக்கு முன்னர் சஹ்ரான் குழுவினர் தங்கி இருந்த வீடுகள் மற்றும் தாக்குதல் மேற்கொண்டு கொல்லப்பட்ட இடங்கள் என்பவற்றிற்கு கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அந்த ஆணைக்குழு உறுப்பினர்கள் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு வருகைதந்த குழுவினர் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, நிந்தவூர் மற்றும் இறுதியாக தற்கொலை தாக்குதல் இடம்பெற்றிருந்த சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் உள்ள வீடு போன்றவற்றையும் பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொண்டனர்.

சஹ்ரான் ஹாசிமின் குழு தங்கிருந்த வாடகை வீடுகள், வெடிபொருள்களை மறைத்து வைத்திருந்த மற்றும் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட பிரதேசங்களுக்கும் இக்குழு சென்று பார்வையிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இவர்களின் வருகையை அடுத்து அப்பகுதியில் பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தி இருந்தனர்.

அத்துடன் சஹ்ரானின் சகோதரர் மற்றும் ஏனைய உறவினர்கள் தங்கியிருந்த - தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற - சாய்ந்தமருது வீட்டின் அருகே செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளரின் புகைப்படங்கள் பலவந்தமாக அழிக்கச்செய்யும் முயற்சிகளையும் அப்பகுதியில் நின்ற பாதுகாப்பு தரப்பினர் மேற்கொண்டனர்.

# கைதிகளுக்கு ஜனாதிபதியின் மன்னிப்பு; ஆராய எண்மர் குழு கோட்டா நியமனம்

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதியின் பொது மன்னிப்புக்காக விண்ணப்பித்துள்ள தண்டனை பெற்ற கைதிகளின் முறையீடுகளை விசாரிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்துள்ளார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறைச்சாலைகளில் கூட்டம் அதிகமாக இருப்பது மற்றும் COVID - 19 தொற்றுநோயிலிருந்து கைதிகளுக்கு ஏற்படும் ஆபத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழுவுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் கலிங்க இந்தாதிஸ்ஸ தலைமை தாங்குகிறார். அதன் மற்ற உறுப்பினர்கள் துணைத் தலைவர் சவீந்திர பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூத்த சட்ட விரிவுரையாளர் மேனகா அரங்கஹா, நீதி அமைச்சின் கூடுதல் செயலாளர் (சட்ட) பியமந்தி பீரிஸ், சிறை ஆணையர் ஜெனரல் துஷாரா உபுல்தெனியா, ஜனாதிபதி செயலகத்தின் சட்ட இயக்குநர் ஹரிகுப்தா ரோஹனதீரா, இலங்கை சட்டத்தரணிகள் சங்க முன்னாள் செயலாளர் கௌசல்யா நவரத்ன மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் மக்கள் தொடர்பு பிரிவு இயக்குனர் கபிலா குணசிங்க ஆகியோர் அடங்குகின்றனர்.

தண்டனை பெற்ற கைதிகளிடமிருந்து மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி ஏராளமான முறையீடுகளை பெற்றுள்ளார் என்ற அடிப்படையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கனாம் என எச்சரிக்கை

## ஆனாலும் கட்டுப்படுத்துவதற்கான பலம் உண்டாம்



கொழும்பு, ஜூலை 13

**தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில் தொற்றுக்குள்ளானோர் எண் ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பலம் சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்புதுறையினரிடம் காணப்படுகின்றது. –இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.**

மக்களின் வாழ்வாதாரத்தை வழமைக்கு கொண்டு வரும் நோக்கிலேயே கொரோனாவுக்கு பின்னர் நாடு முழுமையாக திறக்கப்பட்டது.

ஆனால் எல்லா நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் மக்களும் வெவ்வேறு குழுக்களும் இந்த நிலைமையை உதாசீனப்படுத்தும் நிலைமையே காணப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க கவலை தெரிவித்தார்.

இந்நிலையில் கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் மத்திய நிலையத்தில் கொரோனா தொற்றுக்குள்ளனோர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணி வரை கொரோனா தொற்றுக்குள்ளான 103 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இவர்களில் 103 நோயாளர்களில் 76 பேர் கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் மத்திய நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வருபவர்களாவர்.

14 பேர் புனர்வாழ்வு மத்திய நிலையத்தை அண்மித்தவர்கள் என்பதோடு நால்வர் ராஜாங்கனையில் இனங்காணப்பட்ட நோயாளருடன் தொடர்பினைப் பேணியவர்களாவர்.

அத்துடன் பங்களாதேஷிலிருந்து நாடு திரும்பிய 2பேரும், பெலாரஸிலிருந்து நாடு திரும்பிய 5 பேரும், ஈரானில் இருந்து நாடு திரும்பிய 2 பேரும் பேரும் அடங்குகின்றனர்.

நேற்றைய தினம் இனங்காணப்பட்ட நோயாளர்களில் வெளிநாட்டிலிருந்து வருகைதந்தவர்களை தவிந்த ஏனையவர்கள் கந்தக்காட்டில் கொரோனா சிகிச்சை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அதற்கமைய இது வரையில் நாட்டில் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 2,614 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 1,981பேர் குணமடைந்துள்ளமையோடு 622 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். கந்தக்காட்டில் நோயாளர்கள் இனங்காணப்பட்டமையை அடுத்து சுமார் 300 பேர் சுய தனிமைப்படுத்தலுக்குஉட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலைவரம் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெளிவுபடுத்துகைலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெளிவுபடுத்துகையில் –

கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் நிலையத்தில் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை ஓரளவு அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படாது. எனினும் ராஜாங்கனையில் இனங்காணப்பட்ட நபர் வெளியிடங்களுக்குச் சென்றுள்ளார். அவரது மனைவி மற்றும் மகளும் வெளியிடங்களுக்குச் சென்றுள்ளமையே தற்போது பிரச்சினையாகும்.

இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். சனிக்கிழமை சுகாதார அமைச்சினால் நிறுவப்பட்டுள்ள தொழிநுட்ப குழு கூடியது.

இதில் பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது. தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பலம் சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்புதுறையினரிடம் காணப்படுகின்றது. இவர்களால் அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும் வெவ்வேறு பிரதேசங்களில் நோயாளர்களை இனங்காணபதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.–என்றார்

# வாக்களிப்பை அதிகரித்தால் மட்டக்களப்பில் 4 ஆசனங்கள்

## வந்தாறுமூலையில் சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றைய தினம் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் அலுவலகத்திற்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு வேட்பாளருமாகிய கி.துரைராசசிங்கத்தின் அழைப்பை ஏற்று மேற்படி விஜயத்தை அவர் மேற்கொண்டார்.

இதன் போது ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையின் உபதவிசாளர் கா.ராமச்சந்திரன் ஏற்பாட்டில் சிறு மக்கள் சந்திப்பும் அங்கு இடம்பெற்றது.

இதன் போது இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதத்தினை கடுமையாக அதிகரிக்கச் செய்ய வேண்டும். 04 பிரதிநிதிகள் பெற வேண்டிய இந்த மாவட்டத்தில் மக்களின் வாக்களிப்பு வீதக் குறைவினால் 03 பிரதிநிதிகளை மாத்திரமே பெறக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலையினை அனைவரும் ஒன்றிணைந்து மாற்ற வேண்டும்.

திருகோணமலையில் சுமார் 85 வீத்திற்கு மேல் மக்கள் வாக்களிக்கையில் மட்டக்களப்பில் அது வெகு குறைவாகவே இருக்கின்றது. வாக்களிப்பு வீதத்தை அதிகரிப்பதுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கான வாக்களிப்பினை அதிகரிக்கச் செய்யுமிடத்து 04 ஆசனம் கிடைப்பதென்பது அவ்வளவு கடினமான காரியமாக இருக்காது எனத் தெரிவித்தார்.

# ஐ.தே.கவுக்கு வாக்களிப்பதன்மூலமே தீவக மக்கள் மிகுந்த நன்மையடைவர்

## விஜயகலா மகேஸ்வரன் நெடுந்தீவில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் தான் நாட்டில் ஜனநாயக சூழல் ஏற்பட்டதாக அந்தக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

நெடுந்தீவில் நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகள் அனைத்திலும் ஜனநாயகமற்ற பதற்றமான சூழலில் மக்கள் வாழ்ந்து வந்த நிலை காணப்பட்டது. எனினும் கடந்த நல்லாட்சி அரசின் மூலம் தீவுப் பகுதியில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

தற்போது மக்கள் எந்தவித அச்சுறுத்தலுமின்றி கெடுபிடிகளின்றி சுதந்திரமாக வாழ்ந்து வருகிறார்கள். தீவுப்பகுதி மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதன் மூலமே ஜனநாயகமான சூழல் மீள உருவாக்கப்படும் என்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

நெடுந்தீவு பகுதிக்கு சென்றிருந்த முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், மக்களைச் சந்தித்து கலந்துரையாடியமையோடு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

மேலும் கடந்த ஆட்சியின்போது தம்மால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் கடந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டுத் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் பற்றியும் அவர் ஆராய்ந்திருந்தார்.

அப்பகுதி மக்கள் தமது வீதிகள் அனைத்தும் பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதனால் அவற்றைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.






# கினிகத்தேனையில் சிக்கியது சிறுத்தை



கொழும்பு, ஜூலை 13

கினிகத்தேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெனில்வத்த தோட்ட பகுதியில் வலையில் சிக்குண்ட நிலையிலுள்ள சிறுத்தை ஒன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக நல்லத்தன்னி வனவிலங்கு காரியா லய அதிகாரி பிரபாத் கருணாதிலக தெரிவித்துள்ளனர்.

கெனில்வத்தை தோட்ட குடியிருப்பை அண்மித்த தேயிலை மலைப் பகுதியில் விலங்கு வேட் டைக்காக விரிக்கப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்குண்ட நிலையிலிருந்த சிறுத்தையை பிரதேச மக்கள் காலை கண்டுள்ளனர்.

பிரதேசவாசிகள் கினிகத்தேனை பொலிஸார் மற்றும் வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவித்தமையையடுத்து வலையில் சிக்குண்டுள்ள சிறுத்தை மயக்க ஊசியேற்றி உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்க இனவாதிகள் கங்கணம்!

## சஜித் அணியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் இம்தியாஸ் எடுத்துரைப்பு



கொழும்பு, ஜூலை 13

நாட்டில் முஸ்லிம்களின் மூன்று விடயங்களில் இனவாதிகள் குறிவைத்துச் செயற் படுகின்றார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் இம் தியாஸ் பார்க்கீர் மரிக்கார் தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் நேற்று பல்வேறு பிரசாரக் கூட்டங்களில் அவர் பங்கேற்றார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனவாதத்தை விதைத்து எப்படியாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்று ஒரு தரப்பு துடிக்கின்றது. அவர்களின் நோக்கம் முஸ்லிம்களுடைய கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவங்களை இல்லாமலாக்குவது அல்லது குறைப்பது ஆகும்.

அந்தவகையில் தற்போது ஜாமிஆ நளீ மிய்யா மற்றும் மத்ரசாக்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களும் சேறடிப்புகளும் நடை பெறுகின்றன.

மேலும் முஸ்லிம்களுடைய பொருளாதார மும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களுடைய கடைகளில் பொருள்கள் வாங்க வேண்டாம் மற்றும் அவர்களுடன் கொடுக்கல் - வாங்கல் செய்ய வேண்டாம் என்ற பிரசாரமும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனுடன் முஸ்லிம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்கள் அதிகமாகக் கிடைத்த பகுதிகளில் தற்போது பல சுயேச்சைக் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. இதனுடைய நோக்கம் வழமையாகவே அப்பிரதேசங்களில் தெரிவாகிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப் பினர்களை இல்லாமலாக்குவதாகும்.

இது எல்லாவற்றையும் எமது முஸ்லிம் சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். எமது எதிர்காலம் பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

சில வெளிநாடுகளில் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதோ அதையொத்த ஒரு நிலையை இங்கும் ஏற்படுத்த முற்படுகின்றார்களோ என்ற சந்தேகம் எமக்கு உருவாகியுள்ளது. அவர்களின் செயற்பாடுகளும், பேச்சுக்களும் அப்படித் தான் உள்ளன.

எனவே, முஸ்லிம்கள் தமது பிரதேசங்களில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்வதுடன், இன பேதமற்றுப் செயற்படும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் வாக்களிக்க முன்வர வேண்டும் - என்றார்.

## இராணுவ அதிகாரிக்குக் கொரோனா கண்டியில் 40 பேர் தனிமைப்படுத்தல்

கண்டி குண்டசாலை பிரதேசத்தில் இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொரோனாத்தொற்று உள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து, அவரது குடும்பத்தினர் பி.ஸி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அர்ஜூன திலகரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த இராணுவ அதிகாரி கடந்த 25 ஆம் திகதி விடுமுறையில் வந்துள்ளமையுடன் 11 நாள்கள் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

அவரது வீடு அமைந்துள்ள பிரதேசத்தில் அவருடன் பழகிய நபர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் எனவும் அடையாளம் காணப்பட்டவர்களில் 40 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் திலகரட்ன குறிப்பிட்டுள்ளார்.

# அம்பாறை - கல்முனை கடற்பகுதியில் பெருமளவில் பிடிபடும் நெத்தலி மீன்கள்

அம்பாறை - கல்முனை கடற்பகுதியில் தற்போது அதிகளவான நெத்தலி மீன்கள் பிடிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் பல மாதங்களுக்குப் பின்னர் இன்று இவ்வாறான அதிகளவான மீன்கள் பிடிபட்டன என கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

சுமார் 5 மாதங்களுக்குப் பின்னர் கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறு அதிகளவான மீன்கள் பிடிபட்டன என அவர்கள் கூறியுள்ளனர். எனினும் அதற்கு உரிய விலை காணப்படுவதில்லை என கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது அதிகளவான மீன்கள் பிடிபடக் கூடிய காலமாக இல்லாதபோதும் நெத்தலி மீன்கள் அதிகமாக பிடிபட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது. மீன்களின் விலை மிகவும் குறைவாக காணப்படுவதாக கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.07.2020 இல் வெளியிடப்பெற்றது.